## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 147/2016**

திரு.மோகன்ராஜ் (D.W –2) **29.1.2025.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். முதல் விசாரணை சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் தான் சொன்னேன். 3ம் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் நண்பர் மற்றும் சொந்தம். வாதிகள், 3ம் பிரதிவாதிக்கு என்ன உறவுமுறை என்றால் சகோதரிகள். கோவிந்தசாமிக்கு தற்போது என்ன வயது என்றால் 80. கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எங்கு உள்ளது. அதன் விவரங்கள் தெரியுமா என்றால் குப்பாண்டம்பாளையம், கருவளங்காடில் உள்ளது. க.ச.எண். தெரியாது. அதனுடைய விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. சொத்துக்கள் கோவிந்தசாமிக்கு எப்படி பாத்தியம் என்றால் பூர்விகம் மற்றும் கிரையம் பெற்றது. பூர்விக சொத்து எவ்வளவு கிரையம் பெற்ற சொத்து எவ்வளவு என்றால் தெரியாது. 20.12.2022 ம் மற்றும் 17.9.2012 ம் தேதி நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் ஆவணத்தின் பதிவு எண் பற்றி முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி.

2. 17.9.2012 ம் தேதி கோவிந்தசாமி ஏற்படுத்திய தான செட்டில் மெண்ட் ரத்து செய்த விவரம் தெரியுமா என்றால் கேள்விபட்டேன். நான் தானசெட்டில் மெண்ட் ஆவணத்தை கையொப்பம் செய்யவில்லை. அவ்வாறு கையொப்பம்

செய்து இருந்தால் ஆவணங்களில் பதிவு எண்ணை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. கோவிந்தசாமி ஏற்படுத்திய ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை. 3ம் பிரதிவாதி என்னுடைய நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.01.29 16:29:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.